

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழகத் தோழர்கள் கோபாலபுரம் ஜெயகோபி, சதீஷ்குமார் ஆகியோரின் தாயார் திருமதி. பொன்னியம்மாள் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, நேற்று முன்தினம் (22.09.2025) கோபாலபுரத்திலுள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்பு ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணையிலிருந்து விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, உடுமலை வருவாய் கோட்டாட்சியர் குமார், தலைமைப் பொறியாளர் (நீர்வளத்துறை) முருகேசன் உள்பட தலைமை கழக, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வீ.ஜெகதீசன் தலைமை! பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

### ஏ.கே.எஸ்,விஜயன் - புதுக்கோட்டை தமிழினியன் - எம்,பிரபாகரன் எம்,எல்,ஏ, சிறப்புரை!

பெரம்பலூர், செப். 24 - தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் “ஓரணியில் தமிழ்நாடு” இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” என்ற தீர்மான ஏற்புக் கூட்டங்கள், கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, 22.09.2025, திங்கட்கிழமை,மாலை 6.00 மணியளவில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற தீர்மான ஏற்பு கூட்டத்திற்கு , பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமை வகித்தார்.

இதில் மாநில விவசாய அணி செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன் கலந்து கொண்டு பேசுகையில்,

புதியதாக யார் வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம், அண்ணா, கலைஞருக்கு பிறகு தமிழ்நாட்டிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை விட்டால் யாரும் இல்லை. புதியதாக வருபவர்களைப் பற்றி பேசி நாம் நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

சசிகலா காலில் விழுந்து பதவி வாங்கிய எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவுக்கே துரோகம் செய்தார், அமித்ஷாவிற்கும் நிச்சயமாக துரோகம் செய்வார். ஒன்றிய அரசிடம் பல்வேறு திட்டங்களுக்காக அனுமதி கேட்டு பல மாநில முதலமைச்சர்கள் காத்திருந்தனர். ஆனால் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசை எதிர்பார்க்காமல், துணிச்சலாக செயல்படுத்தினார் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். காலை உணவுத் திட்டம் தற்போது இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.தமிழகத்தில் அதிகளவில் திட்டங்களை செயல்படுத்தியது யார் என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும்.ன என்று ஏ.கே.எஸ்.விஜயன் பேசினார்.

தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை தமிழினியன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே. அருண்,

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுசெல்வி ராஜேந்திரன், எஸ்.அண்ணாதுரை,ராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந. ஜெகதீஷ்வரன், வேப்பூர் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் அழகு.நீலமேகம்,

அரசு வழக்கறிஞர் ப. செந்தில்நாதன்,

அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வலெட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழகச் செயலாளர் ஏ.எஸ்.ஜாகிர்உசேன்,

குரும்பலூர் பேரூர் கழகச் செயலாளர் எம்.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், ஆர்.அருண்,

வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல் பாரூக்,

மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கவியரசு,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன்,

மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ. கார்மேகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார்,

மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க. ரமேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி. ரவி உள்ளிட்ட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம் நன்றியுரையாற்றினார்.



பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில் நடைபெற்ற தீர்மான ஏற்பு கூட்டத்திற்கு , பெரம்பலூர் ஒன்றிய கழகச் செயலாளர் எம்.இராஜ்குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமை வகித்தார். இதில் மாநில விவசாய அணி செயலாளர் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் Ex.MP.கலந்து கொண்டு பேசினார். தலைமை கழக பேச்சாளர் புதுக்கோட்டை தமிழினியன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பரமத்தி வேலூர் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் பரமத்தி வேலூர் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினரும், மாநில வழக்கறிஞர் அணி இணை செயலாளருமான இ.பரந்தாமன் சிறப்புரையாற்றி, ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான உறுதிமொழியை வாசிக்க கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் தெற்கு மற்றும் கிழக்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம் உடுமலைப்பேட்டை, சின்னவீரன்பட்டியில் அமைந்துள்ள தெற்கு மாவட்டக் கழக அலுவலகமான ”தளபதி அறிவாலயம் ”கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணை செயலாளர், மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர், கோவை மாநகராட்சி கல்விக்குழு தலைவர் மாலதி நாகராஜ் முன்னிலையில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா செல்வராஜ் வரவேற்புரையில் தொண்டரணி அமைப்பாளர் லதா லட்சுமி நாராயணன் நன்றியுரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் பெரியாண்டாங்கோவில் குடித்தெரு கிளை கழகம் மற்றும் உதயா பிரதர்ஸ் கபாடி குழு இணைந்து நடத்திய முதலாம் ஆண்டு கபாடி போட்டியை கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கோவை வடக்கு மாவட்டம்**

கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட இ.எம்.எஸ். ரபீதின் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ச. ராஜ் திலக்** (5/10, சென்னிவீரம்பாளையம், சிக்கராம்பாளையம், காரமடை, கோவை) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**தென்காசி வடக்கு மாவட்டம்**

தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட டி. தினேஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எஸ். வீமராஜ்** (48ஏ, தெற்கு தெரு, மடத்துப்பட்டி, சங்கரன்கோவில், தென்காசி) அவர்கள் தென்காசி வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-09-2025.

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## டி.கே. பழனிச்சாமி

**செப்டம்பர் 24 (2000)**



**திருவொற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**